முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1297

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

18.04.2023, செவ்வாய்கிழமை

1. ஞானபிரம்ம மகா சூட்சுமமே
   ஞானிகள் பலம் கொண்ட தவசொரூபமே
   வானவர்கள் போற்றும் வள்ளல் பெருமானே
   வையகத்தைக் காக்க வந்த ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   (சோபகிருது வருடம் சித்திரை மாதம் 5 ம் நாள், 18.04.2023 செவ்வாய்கிழமை)
   வரமென உன் சக்தி உலகினில்
   வல்லமையாக தர்மமாக பரவி நிற்க
3. நிற்கவே அரங்கன் பேர் சொல்லி
   நிலவுலகில் எங்கெல்லாம் தர்மம் நடக்கின்றதோ
   அற்புதம்பட அங்கெல்லாம் யான் இறங்கி
   ஆற்றல்பட அனைவருக்கும் ஆசி தருவேன்
4. தருகவே அரங்கன் சொல்லுகின்ற சன்மார்க்க விதிகளை
   தட்டாது ஏற்கும் மக்களுக்கெல்லாம்
   வல்லமைபட வேலவன் என் அருளும் துணையும் உண்டு
   வழுவாது வணங்கி அரங்கன் குடிலை நோக்கி
5. வல்லமை பட தொடர்ந்து
   வருகின்ற மக்களுக்கெல்லாம்
   இணங்கி ஆறுமுகன் அருள்புரிவேன்
   எல்லா வரமும் தந்து காத்தருள்வேன்
6. அருளாக அறமாக அனைத்துமகா சக்தியாக
   அரங்கன் பிரணவக்குடில் படைத்து அருளிவர
   வரமென உலகோர் அனுகி தீட்சைபெற்று
   வள்ளல் தன்மை கொண்ட தர்மத்தில் உதவி நின்று

7. நின்றுமே தர்ம சேவையாற்றி
நிலவுலகில் நீதிமான் அரங்கன்
உண்மை நெறியே கலியுகத்தை
மீட்கும் நெறி என

8. என உலகோர் சரணாகதி கொண்டுவிட்டால்
இந்த உலகில் சடுதி மாற்றம்
ஞான உலகமாற்றமாக நடந்தேறும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—